www.padippakam.com

ஆகஸ்ட் 1999



தனிச்சுற்றுக்கு மட்டும்

எண்வழி இதழ் : 7

நன்கொடை ரூ.5\-

படிப்பகம்

www.padippakam.com

'மானமும் அறிவும் மாந்தர்க்கு அழகு.'



பெண்கள்
ஆண்களிடமிருந்து
விடுதலை பெறும்
வரைக்கும்
இந்நாடு சுதந்திரம்
பெற்ற நாடாக ஆகவே
முடியாது.
மத சம்பிரதாயமோ,
கடவுள் சம்பிரதாயமோ,
புராண சம்பிரதாயமோ -
எது பெண் விடுதலைக்கு
விரோதமாயிருந்தாலும்
அது ஒழிக்கப்பட
வேண்டியது தான்.

- தந்தை பெரியார்
30.09.1948 - சென்னை சொற்பொழிவு
11.10.1948 - 'விடுதலை'

வாழ்த்துக்களுடன்,

**பகுத்தறிவாளர் கழகம்**

**அருப்புக்கோட்டை.**

படிப்பகம்

www.padippakam.com

கதவு - 7
ஆகஸ்ட் 1999

வெளியீடு :

கருத்தாளர் வட்டம்
(A unit of APPA)
5-36-4 ஆ, பாரதி நகர்,
மின்வாரிய குடியிருப்புகள் கிழக்கு
அருப்புக்கோட்டை - 626 101.
✆ 04566-73322.

நிர்வாக ஆசிரியர் :

மதிகண்ணன்
(கலைவழி மக்கட் பணியம்)

துணை ஆசிரியர் :

முரளி

ஆசிரியர் குழு :

ஜெயராம்
ஜீவநேரு
ராஜசேகர்
அரு.வீ. சிவபாரதி

கணனி :

சிவா லேசர் பிரிண்டர்ஸ்
அருப்புக்கோட்டை.
✆ 04566-72768.

அச்சு :

சேகர் அச்சகம்
அருப்புக்கோட்டை
✆ 04566-70164

மதிப்புரைக்காக நூல் அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.

படைப்புகள் படைப்பாளிகளின் கருத்துக்களையே முன்வைக்கின்றன. APPAவின் கருத்துக்களை அல்ல.

சந்தா
உள்நாடு ரூ. 30/-
வெளிநாடு ரூ. 100/-
MO, DD நிர்வாக ஆசிரியர் பெயரில் அனுப்பவும்

அன்பு நண்பர்களே

உங்களிடமிருந்து நிறைய்ய கடிதங்கள்... கதவு என்ன ஆயிற்று என. காரணம் நீண்ட இடைவெளி. ஏதாவது ஒரு கால இடைவெளிக்குள் கட்டாயப்படுத்திக் கொள்ள வேண்டிய கடமையை உணர்கிறோம். சிறு பத்திரிகைகள் நின்று போவதற்கும், சரிவர வராமல் இருப்பதற்கும் நிறைய காரணங்கள் இருக்கின்றன. அதே காரணங்கள் கதவிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. ஆசிரியர்குழு, பொருளாதாரம், ஒரு தொடர் இன்மை இப்படிப்பட்ட காரணங்களை மட்டும் சொல்லிக் கொண்டு இருப்பதில் பயனில்லை. சரி செய்வதற்கான முயற்சியிலும் ஈடுபட வேண்டும். தொடர் ஒன்று தொடங்கியுள்ளோம். அடுத்த இதழில் இருந்து ஆசிரியர் குழுவில் மாற்றம் உள்ளது. பொருளா-தாரத்தைப் பொறுத்தவரை தாங்-களும் உ-தவலாம் புதிய சந்தா-தாரர்களை உருவாக்குவதன் மூலம். உணர்ந்தோம், முயற்சிக்-கிறோம், வெல்வோம் என்ற நம்பிக்கையுடன்

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

# புகலிட இலக்கியம்

## (சில வரலாற்றுக் குறிப்புகள்)

*தொடர் கட்டுரையின் ஆசிரியர் எம். ஆர். ஸ்ராலின் பற்றி சில...*

*தமிழ் தேசிய விடுதலையின் பெயரில் பட்டப்படிப்பை பாதியில் நிறுத்திக் கொண்ட இவர் 1986 வரை ஈழ விடுதலைப் போரில் நேரடியாகப் பங்கெடுத்தவர்.*

*அதன் பின்னர் ஆசிரிய பணியொன்றில் சுமார் இருவருடங்கள் கழித்தபோதிலும் தொடர்ந்து இலங்கையில் வாழ முடியாமல் துரத்தப்பட்டு பல் தேசம் கடந்து பிரான்ஸ் நாட்டில் அரசியல் தஞ்சம் கோரி அங்கு வாழ்ந்து வருகிறார்.*

*புகலிட இலக்கியத்தின் இன்றைய முக்கிய வெளியீடுகளில் ஒன்றான 'எக்ஸில்' ஆசிரியர்களுள் ஒருவரான இவர் 'எக்ஸில்' நிறுவனத்தின் முக்கிய செயற்பாட்டாளருள் ஒருவருமாவார்.*

*கௌரிமனோகரன் எனும் பெயரிலும் படைப்பிலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.*

*23-ஆவது இலக்கிய சந்திப்பின் நிலையாக வெளிவந்த 'இனியும் சூல் கொள்' தொகுப்பாசிரியருள் ஒருவரான இவர் 1980களின் இறுதியில் இலங்கையில் வெளிவந்த 'உண்மை' பத்திரிக்கையில் துணையாசிரியராய் இன்பலவன் எனும் பெயரிலும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இவ்வாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டிற்கு இலக்கியப் பயணம்வந்த போது நிகழ்ந்த ஒரு கலந்துரையாடலின் விடையாக/ வினையாக இத்தொடர் கட்டுரை வெளிவருகிறது.*

○


படிப்பகம்

www.padippakam.com

# புகலிட இலக்கியம்

## (சில வரலாற்றுக் குறிப்புகள்)

எம். ஆர். ஸ்ராலின்
பிரான்ஸ்

*சொந்த மண்ணில் எனது போராட்ட அனுபவங்களும், புலம் பெயர்ந்து வந்த மண்ணில் என் புதிய அனுபவங்களும் நான் எழுதப் போகும் புலம்பெயர் இலக்கியத்தின் வரலாற்றுக் குறிப்புகளை நிட்சயம் பாதிக்கும் என்பதோடு நான் பிறந்து வளர்ந்த சமூகத்தின் அக,புற காரணிகள் ஒவ்வொன்றும் என்பார்வையையும் அதன் தேவையையும் நிர்ணயிக்கும் முக்கிய நிகழ்வுகளாய் இருக்குமென்பதையும் முற்கூறிக்கொண்டு...*

*காலத்தின் கட்டாயமாய் தமிழ் இலக்கியத்தின் மடியில் இன்னுமோர் குழந்தை "இது தான் நாளைய தமிழ் இலக்கியப் போக்கையே நிர்ணயிக்கும்" நிர்ணயித்துவரும் புலம் பெயர் இலக்கியம் என்கிறார். ஈழத்து நற்போக்கு இலக்கியத்தின் பிதாமகர் எஸ்.பொ. மன்னராட்சிக் காலத்திலும் பிரிட்டிசாரின் பிடியில் இந்திய உபகண்டம் இருந்த போதும் அதன் பின்னருங்கூட புலம் பெயர்ந்த நிலையில் பல இலக்கியங்கள் தமிழில் தோன்றின. எனினும், ஈழத்தமிழர் சமூகத்தின் ஓர் பகுதியே பிடுங்கி எறியப்பட்டது போல் அதன் ஒவ்வொரு - மறுபதியத்தின் போரான துன்ப கரமான வாழ்க்கை நிலைகளில் இருந்து தோன்றுகின்ற தமிழ் இலக்கியம் போல் பரந்து பட்ட அறிவியல் தேவைகளும் அதேவேளை சமூக விடுதலை நோக்கி கூர்மை நிறைந்ததுமான இலக்கியப் போக்கு என்ற வகையில் தமிழ் இலக்கியத்திற்கு இப்புகலிட இலக்கியம் ஓர் புதிய வடிவமே.*

*1983ன் யூலை மாதத்தில் இலங்கையில் நடத்தப்பட்ட பாரிய இனப்படுகொலையானது பெருந்தொகைத் தமிழர்களை நாட்டை விட்டு ஓட அன்றி தமிழின விடுதலை இயக்கங்களில் சேர்ந்துவிட தள்ளியது. இவ்வேளைகளில் ஐரோப்பா, அவுஸ்ரேலியா, மற்றும் கனடா ஸ்கண்டினேவிய நாடுகள் என்று பூமிப்பந்தின் ஒவ்வோர் மூலையும் தமிழர்களை அரசியல் தஞ்சம் தந்து வரவேற்றது. இவ்வேளைகளில் சமூக அக்கறையும், விடுதலை வேட்கையும் கொண்ட படித்தும், படிக்காததுமான இளைஞர் கூட்டமெல்லாம் தமிழீழ விடுதலை இயக்கங்களையே தேர்ந்து கொண்டன. விடுதலை இயக்கங்களில் சேருவது வீணான வேலை படித்தப் படிப்புக்கும், குடும்ப கௌரவத்திற்கும் ஏற்றால் போல் மேலை நாடுகளை தேர்ந்து அங்கு அரசியல் தஞ்சம் கோருவதுதான் எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்றது என்று யாழ் மத்தியதர வர்க்கத்தில் படித்த பல பெற்றோர் தம் இளைஞர்களை வெளிநாடு அனுப்பினர். இவ்வகையினர் தான் 80களின் முற்கூற்றில் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களின் பெரும்பகுதியினர் ஆகும். இவர்களை தேசம் பற்றியோ சமூகம் பற்றியோ அதிக கருசனையற்ற ஓர் பொதுப்புத்தி மட்டத்தினராகவே நான் காண்கின்றேன்.*



படிப்பகம்

www.padippakam.com

80களின் பிற்கூற்றில்தான் பெருந்தொகை இளைஞர்கள் புலம் பெயரத் தொடங்கிய வரலாறு உருவானது. விடுதலையின் பெயரால் ஏமாற்றப்பட்டு, தலைமைப் போட்டியில் பழிவாங்கப்பட்டு, நாட்டை விட்டு துரத்தப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் புகலிடம் தேடிப் புறப்பட்டனர்.

'சக்கரவர்த்தியின்' வரிகளில் சொன்னால்

**"'உனக்கு நாடு இல்லை' என்றவனை விட**
**'நமக்கு நாடே இல்லை' என்று**
**தூபமிட்டவன் எவனோ**
**அவனே என்னை**
**விரட்டியடித்தவன் என்பேன்."**

இலங்கை அரசினதும் இந்திய கூலி படையினதும் தமிழ் மக்கள் மீதான அட்டூழியங்களும், அநியாயங்களும் எவ்வளவு கொடூரமானதோ அதற்கு நிகராகவே விடுதலையின் பெயரால் துப்பாக்கிகள் - தன் சகதோழனையோ மாற்று இயக்க போராளியையோ தன் சொந்த மக்களையோ கொன்றொழித்தன என்ற உண்மை கசப்பானதாயினும் நிதர்சனம்.

இவ்வகையில் புலம் பெயர்ந்த இளைஞர்கள், யுவதிகள் இன்றைய புலம் பெயர் இலக்கியத்தின் மூலவேர்களானார்கள். காரணம் அவர்கள் தங்கள் மண்ணை விட்டு நிர்பந்தத்தின் பெயரில் புலம் பெயர்ந்திடினும் தங்கள் சமூகத்தின் மீதான அக்கறையையும் அதன் பெயரில் மறுக்கப்பட்ட தங்கள் கருத்துக்களையும் வெளிப்படுத்த தகுந்த இடமாக புலம் பெயர் மண்ணைக் கண்டார்கள்.

இவ்வகை இளைஞர், யுவதிகளின் புலம்பெயர் வாழ்வில் இருந்துதான் இலக்கியம் முகிழ்க்கத் தொடங்கியது. சிறுசிறு கையெழுத்துப் பத்திரிகை வடிவத்தில் வெளியீடுகளும், சஞ்சிகைகளுமாய் புலம்பெயர் இலக்கியத்தின் பிரசவம் நிகழ்ந்தது. சொந்த நாட்டில் மறுக்கப்பட்ட உரிமைக்குரல்களையும், மாற்றுக்கருத்துக்களையும் இவ்வகையில்தான் தங்கள் சமூகத்திற்கு தர முடியும் என அவர்கள் நம்பினர்.

இவ்வாறாக, இலங்கைப் பேரினவாத அரசின் கொடுங் கோன்மையை எதிர்ப்பது, புலிகளால் மேற்கொள்ளப்பட்ட மாற்று இயக்கங்கள் மீதான அழிப்புகளை விமர்சிப்பது, ஒவ்வொரு விடுதலை இயக்கங்களுக்குள்ளும் இருந்து வந்த ஜனநாயக மறுப்பு, உள் முரண்கள் என்பவற்றை சமூகத்தின் முன் கொண்டு வருவது என்பதாக தமிழ்த்தேசியவாதத் தளங்களில் நின்றே கருத்துக்கள் வெளிக் கொணரப்பட்டன.

அதே வேளை சொந்த மண்ணில் தமிழீழ விடுதலையோடு இணைந்து சில விடுதலை இயக்கங்களினால் பரப்பப்பட்ட இடதுசாரிக் கருத்துக்களின் தாக்கமும் பெண்ணியம், தலித்தியம் போன்ற விடயங்கள் மீதான கருசனையும் ஆரம்பகால புலம் பெயர் முயற்சிகளில் காணக்கிடைக்கிறது.

தொடரும்...



படிப்பகம்

www.padippakam.com

# புகழ்மிக்க விசாரணைகள்

**சிபி. சதீசு கண்ணன்**

உலக வரலாற்றில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போர் என்பது மனித வரலாற்றோடு இணைந்தே ஆரம்பமாகியிருக்கிறது. ஆதிகால மனிதர்கள்கூட ஒருவரையொருவர் ஒடுக்கித்தான் வாழ்ந்திருக்கிறார்கள். ஒடுக்கப்பட்டவர்கள் அதை எதிர்த்துப் போராடவும் செய்திருக்கிறார்கள். இதன் பரிணாமமாகத்தான் கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்தது மட்டுமின்றி அங்கிருந்தவர்களை அடிமைகளாக்கி விற்ற வரலாறும். வாஸ்கோடகாமாவின் இந்திய வருகைகூட உள்நாட்டு அடிமைத்தனத்திலிருந்து காலனிய அடிமைத்தனத்திற்கான பரிணாமமாகத்தான் நிகழ்ந்திருக்கிறது.

இந்த நூல் காந்தி முதல் மண்டேலா வரை புகழ் பெற்ற, வழக்குகள் விசாரணைகள், தீர்ப்புகளை நம் முன் வைக்கிறது. ஆனால் இந்த 112 பக்க நூலில் இந்த வழக்குகள் குறித்த மிகச்சிறிய வரலாறு மட்டுமே பதிவாகியிருக்கிறது. நீண்ட உலக வரலாற்றில், இந்திய வரலாற்றில் புகழ்மிக்க விசாரணைகள் இவ்வளவுதான் என்று குறித்து விடமுடியாது. இந்தியாவின் புகழ்மிக்க வழக்குகளில் சிலது மட்டுமே இடம் பெறுகிறது. அதிலும் ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்த புகழ்மிக்க வீரர்களின் விசாரணைகள். அனைத்து தரப்பினருக்கும் பரவலாகப் பயன்படக்கூடிய நூல். இந்தியாவிற்கு வெளியிலிருந்து நெல்சன் மண்டேலாவின் வழக்கு மூன்று அத்தியாயமாகத் தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நூல் | : | புகழ்மிக்க **விசாரணைகள்** |
| ஆசிரியர் | : | ஜே. பால்பாஸ்கர் |
| வெளியீடு | : | நியூ-எட் பதிப்பகம்<br>என். ஜீ.ஓ. காலனி,<br>திண்டுக்கல் - 9 |
| பக்கங்கள் | : | 112 |
| விலை | : | 18/- |

பகத்சிங், வாஞ்சிநாதன் போன்றோரின் தீவிரவாதப் போராட்டம் என்றும் நம்மை ஈர்க்கக்கூடியது. இந்திய கம்யூனிஸ்ட் வரலாற்றில் எம்.என். ராய் ஒரு எரி நட்சத்திரம். அவர்மேல் தொடுக்கப்பட்ட கான்பூர் சதி வழக்கின் விசாரணை நமக்குப் பாடமாகிறது. இத்தகைய வரலாறுகள்தான் நம்மை தற்காலச் சூழலில் ஏற்பட்டுள்ள அதி தீவிர நெருக்கடிகளுக்கு எதிராக கொஞ்சமேனும் போராடத் தூண்டுகிறது. தமிழ்மக்கள் புதிய வரலாற்றுக்கான பயணம் தொடங்கியே ஆக வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டுள்ள நிலையில், இது போன்ற வழக்குகளும் விசாரணைகளும் மிகப் பெரிய தூண்டுகோள் என்பதை மறுக்க இயலாது.

இந்த நூலாசிரியருக்கும், இந்த நூல் வெளிவர காரணமாகிய அனைவர்க்கும் நன்றி சொல்ல நாம் கடமைபட்டுள்ளோம். இந்த நூல் மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைகழகத்தில் பாடநூலாக்கப்பட்டதும், தமிழக அரசின் பரிசு பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. ○



படிப்பகம்

www.padippakam.com


கதவு இதழை
அறிமுகம் செய்த

**கதை சொல்லி**

**சிற்றிதழ் செய்தி**

**சிலம்பம்**

**எக்ஸில்-ஃப்ரான்ஸ்**

**இதழ்களுக்கு**

**நன்றி!**



'கதவு' தொடர்ந்து
முன்னேற்றப் பாதையில்
முன்னேற வாழ்த்தும்...



ஜெனித் ஆப்டிக்கல்ஸ்

**61/3, காசுக்கடை பஜார்,**
**ஸ்ரீ லெட்சுமி காம்ப்ளக்ஸ்**
**(கீழ்தளம்)**
**அருப்புக்கோட்டை - 626 101.**
**☎ 04566 - 73214**


தகழி பற்றிய ஞாபகமூட்டல்களுடன் படைப்பிலக்கியம் பற்றிய விமர்சன ஆய்வுகள் இதழுக்கான ஒருவித நவீனமுகத்தை வழங்குகிறது. புதுவகை எழுத்து முறையை நோக்கிய கவிதைகளும் இதற்கு ஆராதசுருதியில் விளங்குகின்றன.

ஹெச்.ஜி. ரசூல்
தக்கலை

விக்ரமாதித்தியனின் "குறிப்பிட்ட படியே" கவிதை முதல் வாசிப்பில் தட்டையான மிகச் சாதாரணமான படைப்பாகத் தெரிந்தாலும் அதன் மெல்லிய நுணுக்கத்தை உணரும்போது கவிதை மேலான தளத்தில் இயங்குவதை அனுபவிக்க முடியும்.

பாலைநிலவன், அழகுபாரதி, சுகுணா, ரெங்கா ஆகியோரும் நிற்கிறார்கள்.

ஏறக்குறைய கதவைப் போல் 5 மடங்கு பக்கங்களைக் கூடுதலாகக் கொண்ட கவர்ச்சிகரமான சட்டை அணிந்த வணிக இதழொன்றைப் படிக்க ஆகும் நேரத்தைவிட 5 மடங்கு நேரம் அதிகம் தேவைப்படும் போது "கதவு" வெற்றி பெறுகிறது. தீவிர வாசகத்தளத்தில் இயங்கும் என்போன்றோருக்கு திருப்தியாகவும் இருக்கிறது.

"எப்பொழுதும் வரும் பேருந்துகள்
எப்பொழுதாவது வரும் தேரோட்டம்"

காலவரைக்குள் சிக்காமல் "எப்பொழுதாவது கதவு வந்தாலும்.." வரணும்..

ராசீ தங்கதுரை.
ஆண்டிபட்டி.

கதவு இதழில் விக்ரமாதித்யன் எழுதிய என் சின்னஞ்சிறு உலகத்தில் நான் நீங்கள் ஆகிய கவிதைகள் அனுபவ வெளிப்பாடாக ஆயினும் அர்த்தமுள்ளதாக இருந்தது.

விவேகானந்தன் எழுதிய நவீன கவிதையில் எழுத்து பிழை அதிகம். நவீன கவிதையில் புரிதலே சிரமமாயிலும் எழுத்து பிழை வேறு ஏற்பட்டால் கவிதை மனதில் பதியாது போகும்.

எஸ். முருகன், தேடல்
அருப்புக்கோட்டை.

படிப்பகம்

www.padippakam.com

# சாமான்யன்

க. திருமுருகன்

இது
பத்தம் பசலிகளின் தேசம்
இங்கு
யார் வேண்டுமானாலும்
எதைப் பற்றியும் பேசலாம், எழுதலாம்
என்ன வேண்டுமானாலும் செய்யலாம்
அண்டை நாட்டுக்காரன்
அணுகுண்டு வீசலாம்.
தீவிரவாதம் வளர்க்கலாம்
இன்ன பிறகாரியங்களை
இன்னலின்றி செய்யலாம்;
அரசியல்வாதிகள்
ஆட்சிக் கவிழ்ப்பு செய்யலாம்
அதிகாரிகள் லஞ்சம் வாங்கலாம்
பொழுது போகாதவர்கள்
நாட்டுப்பற்று பேசலாம்... ஆனால்,
சாதாரண மனிதனுக்கு
இதைப்பற்றி எல்லாம்
என்ன கிடக்கிறது
காலையில் எழுந்ததும்
பால்காரன் கணக்கு
மளிகை பாக்கி
பிள்ளைகள் படிப்பு
மனைவியின் உள்ளாடை
மச்சினியின் இடுப்பு
இப்படி
அவரவர்வேலை அவரவர்க்கு
இதில்
தேசமும், தேசப்பற்றும்
எங்கே வந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# நச்சுப் பொய்கையில்

-ரெங்கா

இடம் பெயர்ந்து வந்து
எப்போது கிளைவிட ஆரம்பித்தது இந்தக்
கள்ளிச் செடி
என்று தெரியவில்லை
தெரியாமலும் இல்லை
ஸ்நேகிதம் வனம் நிராகரித்த
செடி
ஓரமாய் நின்று விஷமாய் வடித்த
கண்ணீரில் வளர்ந்து விட்டிருக்கிறது
ஒரு வழிப்பாதையாய்
கிளை பரப்பி
வனம் வளைத்து
நிமிர்ந்த போது
தலை உயர்த்தி
சொல் சிதறி
விழி மூடி
பிரியம் விலக்கி
மூக்கைப் பிடித்துக் கொண்டு
உட்கொண்டாயிற்று விஷம்
மூர்க்கமாய்
வியர்த்தபடி மல்லாந்தேன் படுக்கையில்
மூச்சுத் திணறல்
காதுகளில் மட்டும் அலங்காரமாய்
ஒலிக்கிறது
பொசுங்கிப் போய்க் கொண்டிருக்கும்
என் சகியின் கதறல்
"என்னைக் காப்பாற்று"
என்று.
செய்வதறியாது
செத்துப் போய்க் கொண்டிருக்கிறேன் ○


படிப்பகம்

www.padippakam.com

## பாம்பிருக்கும் இடம்

-பா. சத்தியமோகன்

இம்முறையும் மறவாமல்
பாம்பு கண்ட கண்
பயத்துடன் துழாவிய கணம்
வில்வ மரப்புதர் அடியிலிருந்து
தயங்கிய என் காலை
பெயர் விளம்பா குருவியே கடக்கும்
தலை சாய்த்துப் பதுங்கிப் படரும்
காணவியலா பாம்பின் வரைபடம்
மறுமுறை வில்வமரப் புதர் அருகே
போகும்வரை
நெஞ்சில் புகும் வளைந்து நெளிந்து
பொந்து தேடி ○

## நகக்கண்கள்

-யவனிகா ஸ்ரீராம்

சாத்தியம் எதுவுமில்லை சங்கரா
அறுபட்ட என் கொப்பூழில்
விரிந்தது தானே பிரபஞ்சம்
கண்களை மூடிக் காத்திருக்கிறேன்
ஸ்தூலங்களின் கிடுக்கிப் பிடியில்
உன் காலடிகள் கரைந்தழியும்
தாவரங்களுற்ற பிரதேசங்களில்
இன்னும் உன் நகக் கண்கள்
வேவு பார்க்க கூடும்
சொல்
மலத்தில் விளைந்த தானியம்
அசுர வியர்வையின் நாற்றம்
தெறிக்கும் சாக்கடை
எங்கிருந்து உன் உடல் குருத்தின்
இறைமை துவங்கியது
தவறில்லைதான் சங்கரா
உனக்குள் மதியமும்
எனக்குள் வெறுமையும். ○



படிப்பகம்

www.padippakam.com

இடம் போதா வீடு
வியாபித்து விட்டது எங்கும்
சாலையோரமும்
பேருந்து நிலையத்திலும்
வீடிருக்கும்
வீதிவழியும் பார்த்து
விழிவெள்ளம் காய்ந்தது
வெளியிலிருந்து அனுப்பியும்
உள்ளிருந்து வரவேற்றதும்
வீட்டாரின் நழுவிய யுத்திகள்
படுக்கையிலும்
நெருக்கிப் புழுக்கப்படுத்துகிறது
தீனிக்குத் தீவிரப்படுகிறது
முரட்டுத் தனமாய்ப் படர
உடல் பூசிய உயிர் இருக்கிறது
எனினும்
மனத்தையே முதலில் இரையாக்குகிறது.

**ரா.சீ. தங்கதுரை**

## ஹைக்கூ-க்கள்

**-மு. முருகேஷ்**

குழந்தை உடைக்கும் வரை
உயிரோடிருந்தது...
மண் பொம்மை.

நடக்கவே
பயமாயிருக்கிறது
தார்ச்சாலையிலும் நத்தைகள்.

செடியை பிடுங்கி நட்டேன்
வேர் ஈரத்தில்
ஒட்டியிருந்தது மண்.

சபிக்காதீர்கள்...
வறண்ட குளத்தின் வெடிப்புகளில்
காய்ந்த விதைகள்


படிப்பகம்

www.padippakam.com

# இருள்படிவு

- ஹெச். ஜீ. ரசூல்

இருளுக்கு எதிரான யுத்தம்
முடிந்த பாடில்லை.

நிலவையும்
நட்சத்ரங்களையும்.
சூரியனையும்
வானத்திலிருந்து கழற்றி
பூமியில் வீசிஎறிந்தாலும்.

விரிகண்களடைத்து
உறுப்பிழந்த
உடல் துறந்த
சுழிமுனைவாசிகளின்
பேரானந்த இருள்நுனியில்
உணர்தலற்ற
ஒளியின் அமிர்ததாரை

அணுத்துகளின்
கர்ப்பக்குழி வாழ்தல் பற்றிய
உணராமையும்
மரணக்குழியினூடே நிகழும்
தேடல் வெளிப்பாடும்

இருளறை என்பதாலே
எல்லாமும் நீள்கிறது
மிக நெருக்கமாய்
இருள் படிந்து.

O



படிப்பகம்

www.padippakam.com

# ஒப்பந்தங்கள்

- ரவி குச்சிமன்ச்சி (*Ravi Kuchimanchi*)
இந்திய மேம்பாட்டிற்கான குழுமம்.
Association for India's Development (AID)

*இரண்டு தலைவர்கள் (Leaders) மேடையில் நுழைகின்றார்கள். (பின்குரல் : 2001 ஆம் ஆண்டின் புத்த பூர்ணிமாவிற்கு முந்தய நாள்) இந்தியாவின் தலைவர் அவநம்பிக்கையுடன் மேடையில் உள்ள மற்றவரை நோக்கி நடக்கிறார்.*

இந்தியாவின் தலைவர் (இ.த.) : நீங்கள் இந்தியரா?

பாகிஸ்தானின் தலைவர் (பா.த.) : இல்லை நான் பாகிஸ்தானில் இருந்து வருகிறேன்.

இ.த. : நல்லது. நீங்க எங்கள்ள ஒருத்தரில்லைன்றத உறுதிப்படுத்தக்கிறதுக்காக சும்மா கேட்டேன். சமீபத்தில எதையாவது சோதனை செஞ்சீங்களா?

பா.த : இல்லை. அந்தத் தவறைச் செய்ய உங்களுக்காக காத்திருக்கோம்.

இ.த. : ஓஹோ! நாங்க சோதனை செஞ்சா நீங்களும் செய்வீங்களோ?

பா.த. : அப்படித்தான்.

இ.த. : சமீபத்துல யாராவது சீனாக் காரரையோ, கொரியாக் காரரையோ சந்திச்சீங்களா?

பா.த. : ஆமா.

இ.த. : ச...ரி... அப்படீன்னா நீங்க சோதனை செய்றதுக்கு ஆயத்தமா இருக்கீங்க. சும்மா சொல்லுங்க... யாருன்னு தெரியுமா?..

பா.த. : செய்வோம். அவ்வளவு தான்... நீங்க சோதனை செய்யப்போறீங்கல்ல?

இ.த. : ஆமாமா.

பா.த. : எங்க?

இ.த. : கராச்சியில... நீங்க...?

பா.த. : புதுதில்லியில..

இ.த. : சரி. இத நாங்க குறிச்சிக்கிறோம். தலைவர்களயெல்லாம் வெளியேறக் கேட்டுக்கிறோம். அடுத்து, நாங்க மறுபடியும் குறிவச்சு லாகூர்ல சோதிக்கலாமுன்னு இருக்கோம்.

பா.த. : அப்படீன்னா நாங்க மும்பையில.

இ.த. : நீங்க என்ன சோதிக்கப் போறீங்க?

பா.த. : புதுதில்லி வெடிப்பில ஏதாவது ஒன்னாவது உயிர்வாழ முடியாதான்னுதான்..ஆமா நீங்க...?

இ.த. : அவங்க சாதாரண வாழ்க்கை வாழ்றாங்களா? இல்ல பூமிக்கடியில பதுங்கு குழிக்குப் போயிருக்காங்களான்னு பாக்கத்தான்.

பா.த. : இதன் மூலமா நாம CIA வை சுத்தமான முட்டாளாக்கலாம்.
இ.த. : ஆமாமா. அவங்களோட ஒற்றுச் செயற்கைக்கோள் நம்ம சோதனையை பார்க்க முயலும். இந்தியாவோட சோதனையுஞ்சரி, பாகிஸ்தான்ல உங்க சோதனையுஞ்சரி அவங்களால ஒரு போதும் துப்பறிய முடியாது.
பா.த. : ஆனா... நாமதான் செய்தியில இருப்போம்... ஆமா (அழிவை) எந்த அளவுக்கு அனுமதிக்கிறது.
இ.த. : உங்களால இந்தத் துணைக் கண்டத்துல இருக்கிற 100கோடிப் பேரையும் அழிக்க முடியாது. ஒருவேளை ஒரு கோடிப் பேர் சாகலாம். அதாவது, அனுமதிக்கப்பட்ட அளவ நாம அடையிறதுன்னா 50 சோதனைகள் நடத்தாம முடியாது. ஆனா,நமக்கு அத்தனை சோதனைகள் தேவைப்படாது.
பா.த. : ஆமா... இரண்டு சோதனைகள் மூலமாகவே நமக்குத் தேவையான தரவுகள் கெடச்சிருக்குமுன்னு நம்ம விஞ்ஞானிகள் சொல்லியிருக்காங்க.
இ.த. : பாருங்க. நாங்க ஒவ்வொன்னையும் கணக்குப் போட்டு வச்சிருக்கோம்...
பா.த. : நாங்க அமெரிக்காவின் ஒத்துழைப்புல தான் இருக்கோம். இப்ப ஐக்கிய நாடுகளின் தலைமைச் செயலகம் இந்தத்துணைக் கண்டத்துல நிறுவப்படப் போகுது.
இ.த. : தெரியும். ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீர்ல நிறுவப்படப்போகுது. அந்த வகையில நாங்க அது இந்தியாவுல இருக்குன்னும், நீங்க பாக்கிஸ்தான்ல இருக்குன்னும் உரிமை கொண்டாடலாம்.
பா.த. : அமெரிக்காகாரங்க முதல் சோதனை முடிஞ்சதும் ஒத்துக்கலைனாலுங் கூட லாகூர் மும்பை சோதனைகளுக்கு அப்புறம் ஒத்துக்கத்தான் வேணும். ஏன்னா, அவங்களும் இரண்டு தடவை மட்டுமே சோதனை பண்ணி இருக்காங்க... (சற்று நிறுத்தி) ஹிரோசிமாவுலயும், நாகசாகியிலயும்.
இ.த. : அதனால. நாம சர்வேதச முன்னணியில கட்டுப்பாட்ட ஏற்படுத்த முடியும். என்ன ஒண்ணு... அதுக்காக நம்ம சொந்த மக்களையே கொல்ல வேண்டியதாயிருக்கு.
பா.த. : அப்படி இல்ல. நீங்க எங்க மக்களக் கொல்றீங்க. நாங்க உங்க மக்களக் கொல்றோம். அது தான் போர்த் தந்திரம்...ஒரு போர் நடந்து முடிஞ்சிருக்கும். போர்கள் எப்பவுமே தேசத்துக்கு உள்ளே ஒற்றுமையை வலுப்படுத்தும். அனைத்துக் கட்சிகளும் மக்களும் போருக்கு ஆதரவளிப்பார்கள்.
இ.த. : ஆனா. நாங்க முதல்ல பயன்படுத்த மாட்டோம்னு பேசியிருக்கோமே.
பா.த. : அதனாலென்ன. முதல்ல செயல்படுத்துங்க. அப்புறம் NPT (Nuclear Prediferation Treatly) பத்திப் பேசுங்க.பிரான்சப் பாருங்க. முதல்ல சோதனை செஞ்சாங்க. அப்புறம் முழுமையான

அணு ஆயுத தடை ஒப்பந்தத்துல (CTBT - Comprehensive Test Ban Treatly) கையெழுத்துப் போட்டாங்க.

இ.த. : ஆமா... முதலில் பயன்படுத்துவதில்லை ஒப்பந்தத்துல கையெழுத்துப் போடுறதுக்கு முன்னால நாங்க பயன்படுத்தியே ஆகணும். ம்ஹீம்... இது மாதிரியான ஒப்பந்தத்துல அமெரிக்கா மட்டும் ஏன் கையெழுத்துப் போட்டதுன்னு இப்பத்தான் புரியுது... (சற்று நிறுத்தி) அணுப்பொழிவு நேரத்துல பூமிக்கடியில பதுங்கு குழியில் உயிர்வாழ்றதுக்கான வாய்ப்புகள் பற்றிய தரவுகள் அவங்க வச்சிருக்காங்க. அப்புறம், குண்டு விழாத பாதுகாப்பான தங்குமிடம் கட்றதப் பத்தியும் தெரிஞ்சு வச்சிருக்காங்க.

பா.த. : அது சரி.. நீங்க முதல்ல கராச்சியில சோதனை பண்ணுங்க. அப்புறம் நாங்க தில்லியில. அதுவே ஒரு மாதிரியா போரா மாறிடும்.

இ.த. : அப்புறம் மறுபடி நீங்க முதல்ல சோதனை பண்ணுங்க.அப்புறம் நாங்க லாகூர்ல. போரோட முடிவுல நாம தேசியக்கதாநாயகர்களாக மாறியிருப்போம்.

பா.த. : நமக்கு பாதுகாப்பான தங்குமிடம் கட்டுறதுக்குத் தேவையான தரவுகள் கெடச்சிரும். அப்புறம், நாம ரெண்டு பேருமே "முதலில் பயன்படுத்துவதில்லை" ஒப்பந்தத்துல கையெழுத்துப் போடுவோம். அப்புறம், அதேமாதிரி அமெரிக்காவையும் இதுல கையெழுத்துப் போடக் கேட்டுக்குவோம்.

***விளக்குகள் மங்குகிறது.***

***(பின் குரல் : நாங்கள், மக்கள், அரசியல் தலைவர்களின் அணு ஆயுதச் சதுரங்க விளையாட்டில் பகடைக் காய்களாய்.. ஒருநாள் அணுகுண்டு போடப்பட்ட போரை ஞாயப்படுத்துகின்ற எங்கள் தலைவருக்கு நாங்களும் ஆதரவு காட்ட வேண்டிவரும் அல்லது 'துரோகி' என முத்திரையிடப்படுவோம். அமெரிக்கர்களே முதலில் இந்தத் தவறைச் செய்தவர்கள். (நம்புங்கள் - இரண்டாம் உலகப் போர் ஹிரோசிமாவையும் நாகசாகியையும் ஞாயப் படுத்தியது.) நாமும் அதைச் செய்ய அனுமதிக்காதீர்கள்.***

**AIDயின் ரவி குச்சி மன்ச்சி (Ravi Kuchimanchi) யிடமிருந்து 'புதிய கல்வி' சுற்றுச்சூழல் மாத இதழின் இணை ஆசிரியர் அசுரன் மூலமாக கதவிற்கு வந்த ஆங்கில நாடகம்.**

**தலைப்பும் தமிழாக்கமும்**
**- நிலாவிழியன்.**

○○○

www.padippakam.com

"தகழி" பற்றிய சிறு கட்டுரை ரொம்பப் பொருத்தமாயிருந்தது. "நூல் மதிப்புரைகள்" தெளிவாகவும், விரிவாகவும் செய்யப்பட்டிருப்பது நல்ல அம்சம். அழகு பாரதி நல்ல ஹைக்கூ கவிஞராய் என் பார்வைக்கு புதிய வரவாகியுள்ளார். "கதவு" இன்னும் அகலமாய் வெளிக்காற்றை உள்வாங்கட்டும். "சிறுவர் இதழ்" இதழ் முயற்சியின் புதிய வரவாகட்டும்.

மு. முருகேஷ்
புதுக்கோட்டை - 2.

புத்தக அமைப்பில் மாறுதல் ஏற்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது. உள்ளடகத்திலும் கவனம் செலுத்துங்கள்

வனமாலிகை, சதங்கை
நாகர்கோவில்.

மேம்பாட்டு ஒளிப்பேழை என்ற கட்டுரையைத் தவிர இதழில் வேறு கனமான விஷயங்கள் இல்லையே? ஆனால், சிறுபத்தரிகை உலகில் இல்லாத அதிசயமாய், சிறுவர் இதழ் ஒன்று தொடங்குவதாக அறிவித்திருப்பது கண்டு மகிழ்ச்சி.

காலசுப்பிரமணியம்,
உதகை.

நூல் மதிப்புரை நன்கு அமைந்திருந்தது. மதிகண்ணனின் அ.நித்யம் இன்றைய சமூக அவலங்களைத் தொட்டுக் காட்டியது.

நவீன்குமார்
தமிழ் இதழ்கள் சேகரிப்பாளர்,
நடுவிக்கோட்டை - 614 602.

கதவு தொடர்ந்து வருவது போற்றுதலுக்குரியது.

முனைவர். க. பசும்பொன்
தமிழ் வளர்ச்சித் துறை,
விருதுநகர் - 2.


சமூகத் தலைப்பில்
பட்டி மண்டபம்
வழக்காடு மன்றம்
விவாதச் சதுக்கம்
அறிவுப்பூர்வமாகவும்,
நகைச்சுவையாகவும்
நடத்தித் தர

இரா. ஜெயராம்
16, டி.ஆர்.வி. நகர்
தொடர் வண்டி போக்குச் சாலை
அருப்புக்கோட்டை - 626 101.
தொலைபேசி : 04566 - 73175



AMATURE RESEARCH
Conservation of Energy
(Mech. Dept.)

Those who are interested

Contact :
Mr. SA. SAADHALI
61/3, KASUKADAI BAZAAR,
ARUPPUKOTTAI - 626 101.
TAMILNADU - INDIA
Off + 91 4566 73214
Resi+ 91 4566 54797

www.padippakam.com

# ஊடகங்கள்

*(29.8.99 - ஞாயிறு அன்று கருத்தாளர் வட்டத்தில் நந்தன் இதழின் சிறப்பாசிரியர் திரு. சுப. வீரபாண்டியன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...)*

## மூன்று Mகள்

சில ஆண்டுகளுக்கு முன்னர் நான் ஓர் ஆங்கிலக் கட்டுரை படித்தேன். "Three M's The Great Power" என்று அந்தக் கட்டுரையின் தலைப்பு. பொறியியலில் 4M என்பது Man, Material, Machine and Money. ஆனால், சமூகவியலில், அரசியலில் இது என்ன 3M.

ஒரு காலத்தில் இந்த உலகத்தை ஆண்டது Muscle Power. உடல் வலிமை. மன்னனாக வருவதற்கு ஒருவன் உடல்வலிமை மிக்கவனாக இருக்க வேண்டும். மன்னனாக வருவதற்குக் கூட அல்ல. ஒரு பெண்ணை மணந்து கொள்வதற்குக் கூட ஒருவன் உடல் வலிமை மிக்கவனாக இருக்க வேண்டும். இளவட்டக் கல்லைத் தூக்க வேண்டும். முல்லை நிலமாக இருந்தால் காளையை அடக்க வேண்டும். குறிஞ்சி நிலமாக இருந்தால், ஒரு புலியைக் கொன்று அதன் நகத்தை எடுத்து வரவேண்டும். இவையெல்லாம் உடல் வலிமை சார்ந்தது. இதுதான் கட்டுரையாளர் குறிப்பிட்ட முதல் M.

அடுத்து வந்தது Money. Muscle Powerஐத் தொடர்ந்து வந்த வலிமையான சக்தி பணம். உடல் வலிமையிலிருந்து பொருள் (பண) வலிமைக்கு உலகம் மாறிவிட்டது. இன்று, உடல் வலிமைக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை. இன்றைய திருமணங்களிலே கூட மணமகன் அரசுப் பணியிலே இருக்கிறானா? மாதம் பதினைந்தாயிரம் ரூபாய் சம்பாதிக்கிறானா? என்று தான் பார்க்கப்படுகிறது. அவன் நோஞ்சனாக இருந்தால் கூடப் பரவாயில்லை. இதைத் தான் அந்தக் கட்டுரை இரண்டாவது M என்கிறது. Money Power - The Second M.

மூன்றாவது M. வருங்கால சக்தி. Media Power. ஊடக வலிமை. இந்த மூன்றாவது M (Media Power) தான் நாளை உலகை ஆளப் போகிறது என்கிறது அந்தக் கட்டுரை. ஊடக வலிமை போதுமா? உடல் வலிமை, பொருள் வலிமை வேண்டாமா? என்றால் ஊடக வலிமை மூலமாக மற்றவைகளை சேர்த்துக் கொள்ள முடியும் என விடை வருகிறது.

## அச்சு ஊடகம்

அச்சு ஊடகத்தில் மூன்று விஷயங்கள் பின்பற்றுகின்றன. முதலாவது பரிசு. முன்பெல்லாம் பத்திரிகை மலர்கள் வரும்போது மு.வ.வின் சிறுகதை வருகிறது. கண்ணதாசன் கவிதை வருகிறது என விளம்பரம் வரும். ஆனால், இன்றோ கார் வருகிறது. 9 கிலோ வெள்ளி வருகிறது. எடைக்கு எடை மைசூர்பாகு வருகிறது என விளம்பரம் வருகிறது. எனக்குத் தெரிய ஒருவர் ஒரே பத்திரிகையின் ஐந்து தீபாவளி மலர்கள் வாங்கியிருந்தார். ஒன்றிலில்லை என்றாலும், அடுத்ததிலாவது பரிசு விழட்டுமே என்று. சுருக்கமாகச் சொன்னால் 'பெரிய அளவில் அச்சடித்த' பரிசுச் சீட்டு விற்பனை தான் நடக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

இரண்டாவது ஆபாச படம் போடுதல். குறைந்த பட்சம் ஏதாவது ஒரு நடிகையின் வண்ணப்படம் நடுப்பக்கத்திலோ அல்லது கடைசிப் பக்கத்திலோ போடுவதை வழக்கமாக்கிக் கொண்ட பத்திரிகைகள்.

மூன்றாவதாக வட்டாரச் செய்தி எழுதுவது. நடந்த உண்மை சில நேரங்களில் கற்பனை கலந்து விறுவிறுப்பான செய்தியாக்கப்படுகிறது. சில நேரங்களில் நடக்காததும் கூடச் செய்தியாகி விடுகிறது.

தகவல் ஊடகங்களின் வளர்ச்சி :

தகவல் தொடர்புக்காக புறாவைத் தூது விட்டதில் தொடங்கி இன்று தகவல் ஊடகம் மிகமிக வளர்ந்திருக்கிறது. அதனுடைய உச்சக்கட்டமாகச் சொல்ல வேண்டுமென்றால், CHAT என்று (கணிப் பொறியிலே இணையத்தின் மூலம்) ஒன்றும், COOL TALK என ஒன்றையும் இன்றைக்கு ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்.

CHAT என்பது கணிப்பொறியின் உதவியோடு (இணையத்தின் மூலம்) உலகத்தின் எந்த மூலையில் உள்ளவரோடும் நாம் உடனுக்குடன் எழுதி, பதில் பெற்று (வரிமுடிவில்) என ஒரு கருத்தரங்கின் நிகழ்வில் கூட உடனுக்குடன் அவர்களின் பங்களிப்பை நிலை நிறுத்த முடியும்.

CHATன் அடுத்த கட்டமாக உலகின் எம்மூலையில் உள்ளவரும் கணிப்பொறியின் உதவியுடன் ஒலி,ஒளி வடிவிலான COOL TALK மூலம் ஒரு கருத்தரங்கில் பங்கேற்க முடியும். ஆனால், இப்படிப்பட்ட வளர்ச்சி சிந்தனையாளர்களிடம் வராமல் 'வணிகர்களிடமும், பண்பாட்டைச் சீரழிப்பவர்களிடமும் உள்ளது.

பொதுவாக ஒரு சிலரைத் தவிர பொது வாழ்க்கைக்கு வருகிறவர்களில் பெரும்பான்மையானவர்கள்

**புகழ் பணம் பதவியின் மூலம் கிடைக்கும் அதிகாரம்**

ஆகிய மூன்றையும் தேடித்தான் வருகின்றார்கள். இந்த மூன்றையும் ஊடகங்களின் மூலம் எளிதாக சேர்த்துவிட முடிகிறது. இம் மூன்றையும் திரைப்படம் / தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் மிக எளிதாகப் பெற்றுத் தருகின்றன. அதிலும் குறிப்பாக திரைப்படத்திலே இருப்பவர்கள்தான் அரசியலிலே ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். நண்பர் அறிவுமதி இதைத்தான் ஒரு கவிதையிலே சொல்லுவார்.

"எங்கள் தமிழர்கள் தொடர்ந்து
திரைப்படம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்
அடுத்த முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க - என

அந்த அளவிற்கு ஊடகம் என்பது அதிகாரத்தைக் கொண்டுவந்து குவிக்கிறது. சினிமாவை விட தொலைக்காட்சி மோசமான பாதிப்பை ஏற்படுத்துகிறது.

"அப்துல்லா மலைக்கு வரவில்லை என்றால்
மலை அப்துல்லாவிடம் வரவேண்டும்" என்பது போல திரைப்படத்திற்கு நாம் போக வேண்டும். தொலைக்காட்சி நம்வீட்டிற்குள் வந்து கதவைத்தட்டுகிறது. ஒவ்வொரு விளம்பரத்திலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் மூடநம்பிக்கையும்,



படிப்பகம்

www.padippakam.com

மோசமான கலாச்சாரமும் பரப்பப்படுகிறது. நல்ல சிந்தனைகளுடன் தூங்கவிடாமல், தூங்கும் நேரம் திகில் நேரமாக்கப்பட்டு விட்டது.

நமக்குத் தெரிந்து நேருவின் பிறந்தநாள் நவம்பர் 14ஐ குழந்தைகள் தினம் என கொண்டாடுகிறார்கள். ராதாகிருஷ்ணன் பிறந்த நாள் செப்டம்பர் 5 ஆசிரியர் நாள் என்று ஒரு பெயர் உண்டு. பெரும்பாலும் அந்த நாளை போராட்டுத்திற்குரிய நாளாகவே ஆசிரியர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வது வழக்கம்.

ஆனால், இன்று புதிதான ஒரு கலாச்சாரப் புகுத்தல் ஊடகங்களின் வாயிலாக நடைபெறுகிறது. சில நாள்களுக்கு முன் அன்னையர் நாள் என்று ஒரு நாள் ஊடகங்களால் நமக்கு அறிவிக்கப்பட்டது. இது அம்மாவிற்குக்கூட ஒருநாள் ஒதுக்கித்தான் நினைத்துப் பார்க்க வேண்டும் என நம்மைத் தள்ளுவது. பிப்ரவரி 14 காதலர்கள் தினம். இன்று ஆகஸ்ட் 29 மனைவியர் நாள் என ஊடகங்களால் அறிவிக்கப்படுகிறது. அப்படியானால் மற்ற நாட்கள் யாருடைய நாள்கள்.

இவற்றின் பின்னணியில் ஓர் அரசியல் இருக்கிறது. இவை எல்லாம் ரக்ஷா பந்தனில் (சகோதரர் நாளில்) இருந்து தொடங்குகிறது. இதனுடைய அடிப்படையை ஆராய்ந்தால் இது ஒரு வணிக தந்திரம். ஒவ்வொரு நாள் என வைத்துக் கொள்வதன் அடிப்படையான சூசகம் இன்னும் நான்கைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நாள்கள் நம் மனதில் பதியும். அதையொட்டி அந்த நாளுக்குரியவர்களுக்கு பரிசுகள் வாங்கிக் கொடுப்பதும், வாழ்த்து அட்டைகள் பரிமாறிக் கொள்வதும் என மெல்ல மெல்ல நம்மை ஒரு வணிக வலைக்குள் ஈர்ப்பது தான் இதிலுள்ள அரசியல்.

இன்றைக்கு இருக்கிற ஊடகங்கள் இந்தச் சமூக அமைப்பை அப்படியே வைத்திருக்க அல்லது மோசமாக்க முயலுகின்றன. நாம் அதே ஊடகங்களைப் பயன்படுத்தி இந்தச் சமூக அமைப்பை மாற்ற முடியுமா? எனச் சிந்திக்க வேண்டும். ஊடகங்களில் மோசமானவற்றை எதிர்த்துப் போரிடல் என்ற முறையில் வழக்கமான கடிதம் எழுதுதல், சுவரொட்டி ஒட்டுதல், மக்களிடம் விஷயத்தை எடுத்துச் சொல்லுதல் என்பதுடன், மாற்றுகளை முன் வைப்பதும் நம் கடமை.

"அறிவியலுக்கு எந்த தியாகமும் மாற்றாகாது" ஆம், அறிவியல் அணுகுமுறையின்று செய்யப்படுகிற தியாகம் வீண். மாற்று என்பதற்காக தொலைக்காட்சியில் தனி அலைவரிசையை உடனே தொடங்க முடியாது. ஆனால், SLOT எனப்படும் 30 நிமிடத்தை நம்மால் நம் நிகழ்ச்சிகளுக்காக வாடகைக்கு எடுக்க முடியும். வாடகையாக நாம் செலுத்திய பணத்தைக் கூட 8 நிமிட விளம்பர ஒதுக்கீட்டு நேரத்தை பத்துப் பத்து வினாடிகளாகப் பிரித்து விற்பதன் மூலம் திரும்பப் பெற முடியும். விளம்பரதாரர் கிடைக்கும் விதத்தில் நாம் நிகழ்ச்சிகளைத் தயாரிக்க வேண்டும். நிகழ்ச்சிகள் கருத்தூட்டுவதாகவும், அதே நேரத்தில் அலுப்பூட்டாததாகவும் இருக்க வேண்டும்.

○ ○ ○



படிப்பகம்

# ஆளுமை

அலுவலக கடிகாரம் நேரம் அய்ந்தரை என்றது. காலையிலிருந்தே இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தவனுக்கு ஒரு வழியாக நிம்மதி பிறந்தது. நேரே வீட்டிற்குச் செல்ல வேண்டும். இன்று எப்படியும் சங்கீதா அலுவலகம் சென்றிருக்க மாட்டாள். நேற்று நடந்து கொண்டதற்கு வருத்தம் தெரிவித்து இனி எப்போதும் இப்படி நடந்து கொள்ள மாட்டேன் என்று உறுதி அளித்து விட வேண்டும். எண்ணங்கள் அலை மோத மனது வலிக்க வீடு சென்றடைந்தவனைக் கதவில் தொங்கிய பூட்டு வரவேற்றது. "சங்கீதா வேலைக்குப் போய் விட்டாளா என்ன? சென்று இருந்தாலும் இந்நேரம் திரும்பி இருக்க வேண்டுமே!" திகைத்து நின்றவனைப் பக்கத்து வீட்டுச் சிறுமியின் குரல் அழைத்தது.

"மாமா... இந்தாங்க சாவி. அக்கா கொடுக்கச் சொன்னாங்க.."

"எப்பக் கொடுத்தாங்க சாவியை. அமுதா ஸ்கூல்லே இருந்து வந்துடுச்சா..."

"இல்லே மாமா. அக்கா இன்னக்கி வேலைக்குப் போகலே. அமுதாவும் ஸ்கூலுக்குப் போகலே. காலைலேயே ரெண்டு பேரும் ஆட்டோவிலே வெளியே கௌம்பிப் போயிட்டாங்க."

"எங்கேன்னு சொல்லலியா..."

"ஊருக்குப் போறேன். மாமா வந்தா சாவியைக் குடுத்திடுன்னு மட்டும் சொன்னாங்க"

இளங்கோ இடிந்தான். எதிர்பாராத சூழல் அவனைக் கடுமையாகத் தாக்கியது. கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவன் பொத்தென்று சோபாவில் விழுந்தான். கதவைக் கூடச் சாத்தவில்லை.

திறந்திருந்த கதவின் வழியே உள்ளே நுழைந்த காற்று மேசை மீது கிடந்த புத்தகத்தின் நடுவிலிருந்த வெள்ளைத் தாளைப் படபடக்கச் செய்தது.

மெல்ல எழுந்தவன் வேகமாகத் துடிக்கும் இதயத்தை மெதுவாக அழுத்தியபடி புத்தகத்திலிருந்து அந்தத்தாளை உருவினான். சங்கீதாவின் கடிதம் தான்.

"நமது இருவரின் மன நிம்மதியின் பொருட்டு அமுதாவுடன் நான் வெளியேறுகிறேன். என்னைத் தேடிச் சந்திப்பதைத் தவிர்த்தால் அதுவே எனக்குச் செய்யும் மிகப் பெரிய உதவி." - சங்கீதா

இளங்கோ வெலவெலத்துப் போனான். கையில் இருந்த கடிதம் இலேசாக நடுங்குவது போல் தோன்றியது. நேரம் மட்டும் ஓடிக் கொண்டிருந்தது.

சங்கீதா - இளங்கோவின் அரசாங்கப் பணியில் இருக்கும் அழகான மனைவி. திருமணமாகி ஆறு ஆண்டுகளில் அமுதா அய்ந்து வயது மகள்.

இளங்கோவும் தனியார் நிறுவனமொன்றில் கை நிறைய சம்பளம் வாங்கிக் கொண்டு இருக்கிறான். இல்லறம் அடிப்படையான பொருளாதாரச் சிக்கல் இல்லாததால் நல்லறம் போல் தோற்றம் தந்து நகர்ந்து கொண்டிருந்தது.

இப்படி இருந்த வாழ்க்கை சூறாவளியாக மாற எங்கிருந்தோ வந்தான்

www.padippakam.com

கண்ணன் என்கிற கார்முகில்.

அடுத்த போர்ஷனில் குடியிருக்கும் இளங்கோவின் மூத்த அதிகாரி செந்தில்நாதனின் தூரத்து உறவு கண்ணன். கவிதை எழுதி வெட்டியாக காலத்தைக் தள்ளிக் கொண்டு இருக்கிறான் என்பது இளங்கோவின் அபிப்பிராயம். ஆனால் சங்கீதாவின் எண்ணம் வேறு மாதிரியாக முளைத்தது தான் பின்னர் வினையாகி முடிந்தது.

கண்ணன் தாய் தந்தையற்றவன். உறவினர்களால் எப்படியோ வளர்க்கப்பட்டு ஆளானவன். அதனால் தான் தனது தனிமையை மறக்க கவிஞன் ஆனானோ என்னவோ.

இருபத்தெட்டு வயதாகியும் எந்த வேலையிலும் நிலையாக இல்லாத அவனை எப்படியேனும் நிரந்தரமாக ஓர் இடத்தில் அமர்த்தி விடுவது என்று செந்தில்நாதன் கங்கணம் கட்டிக் கொண்டார் போலிருக்கிறது. இந்த ஆறெழு மாதங்களில் அவர் ஏற்பாடு செய்து தந்த வேலைக்கும் ஒழுங்காகச் சென்று வந்து கொண்டிருந்தான்.

இளங்கோ ஆரம்பத்தில் கண்ணனின் வருகையையோ தனது குழந்தையோடு அவன் கொஞ்சி மகிழ்ந்து கொண்டிருந்த நேரங்களையோ அவ்வளவாகக் கவனிக்கவில்லை என்று கூறுவதை விட அவனது இயல்பே அதுவாகத் தான் இருந்தது என்பது பொருத்தம்.

அலுவலக வேலை மாலையே முடிவடைந்தாலும் நண்பர்கள் அங்கு - இங்கு என வீடு திரும்புவது இருட்டிய பிறகு தான். வந்தவுடன் தொலைக்காட்சி முன்பு அமர்ந்தால் உணவும் சின்னத்திரையைப் பார்த்த படியே வயிற்றுக்குள் செலுத்தப்பட்டு விடும். பின்னர் படுக்கை. மறுநாள் வழக்கம் போல. இத்தனை ஆண்டுகளில் சங்கீதாவுக்கும் இம்முறையே பழகிப் போயிருந்தது. தனது கலந்துரையாடலுக்கும் உற்சாகத்திற்கும் எப்போதுமே அவள் இவனை நம்பி இருக்கவில்லை. அலுவலகத்தில் அவளுக்கென்று ஒரு நண்பர்கள் வட்டம் இருந்தது.

இளங்கோவின் இந்த இயந்திரமயமான வாழ்க்கையில் பழுது ஏற்பட்டிருக்கிறது என்பதை மூன்று மாதங்களுக்கு முன்னர் தான் இளங்கோ கண்டுபிடித்தான்.

பழுதைக் கண்டு பிடிக்கும் வல்லமை எல்லாம் அவனுக்கு இல்லை தான். சங்கீதாவே விஷயத்தைக் கோடிட்டுக் காட்ட இவன் உணர ஆரம்பித்தான்.

அன்றிரவு... வழக்கம் போல படுக்கையறைக்குள் பழக்கமான காட்சியை அரங்கேற்றம் செய்யப் புகுந்த போது சங்கீதா கேட்டாள்.

"எப்படி உங்களாலே ரசனையே இல்லாமே தொடர்ச்சியா ஒரு காரியத்தைச் செய்ய முடியுது?"

இரவிக்கையில் ஊக்குகளைக் கழற்றிக் கொண்டிருந்த நிலையில் ஒன்றும் புரியாமல் விழித்தான் இளங்கோ. தனது முயற்சியைக் கைவிட்டவன் கேட்டான். "என்ன சொல்றே... புதுசா என்னவோ கேக்கறியே."



படிப்பகம்

"ஆமா.. நான் புது மனுஷி ஆயிட்டேன். அதுதான் புதுசாக் கேள்வி கேக்கறேன்."
"என்ன ஆச்சு சங்கீ உனக்கு"
"எனக்கு இது பிடிக்கலே"
"எது"
"இது மாதிரி இருக்கற என்னைப் பிடிக்கலே. உங்களைப் பிடிக்கலே. இந்த வாழ்க்கையே பிடிக்கலே."
"எதனாலே"
"ரசனை இருக்கிற வாழ்க்கை எதுன்னு கண்டுபிடிச்சுட்டேன். அதனாலே"
"ரசனையா... என்ன உளர்றே!"
"உளறலே. உண்மையைச் சொல்றேன். சாப்பிடறதுலே ஒரு பிடித்தம் இருக்கணும். உடுத்தறதுலே ஒரு பிடித்தம் இருக்கணும். மனுசங்க மேலே ஒரு பிடித்தம் இருக்கணும். அதுக்குப் பேருதான் ரசனை. அதுதான் வாழ்க்கை"
"எனக்கு எதுலேயும் பிடித்தம் இல்லேங்கறியா..."
"ஆமா. உங்களுக்குச் சாப்பாட்டுலே ஒரு பிடித்தம் கிடையாது. உலகத்து மேலே ஒரு பிடித்தம் கிடையாது. ஏன்.. என்னோட படுக்கறதுலே கூட உங்களுக்கு ஆர்வம் கிடையாது. அய்யோ கடனேன்னு எல்லாத்தையும் செய்யறீங்க."
"அப்ப ரசனை உள்ள ஒருத்தனைப் பாத்துட்டியா" கோபமே குரலாகியிருந்தது. ஒரு நிமிடம் நிதானித்துப் பின் சொன்னாள். "ஆமா.. தினமும் கண்ணனைப் பாத்துக்கிட்டுத் தானே இருக்கேன்."
"இப்படிச் சொல்ல உனக்கு வெட்கமா இல்லே"
"வெட்கப்பட்டா உண்மை வெளியே வராதே. அதை மனசுக்குள்ளேயே வெச்சுக்கிட்டு என்னாலே புழுங்கிச் சாக முடியாதே"

ஆத்திரத்துடன் படுக்கையை விட்டு எழுந்தவன் லுங்கியைச் சரியாகக் கட்டிக் கொண்டு அறைக் கதவைப் படாரெனச் சாத்தி விட்டு வெளியேறினான். அன்றிலிருந்து தொடங்கியது அவனது நிம்மதியான வாழ்க்கையின் தகர்வுப்படலம்.

அலுவலகத்திலிருந்து கிளம்பி டாண் என்று ஆறு மணிக்கெல்லாம் வீட்டில் ஆஜராகிவிடும் சங்கீதாவுக்கு ஆரம்பத்தில் ஒரு நல்ல நண்பனாகத் தான் இருந்தான் கண்ணன். மாலையில் பள்ளி விட்டு வந்து தன்னந்தனியே இருக்கும் குழந்தை அமுதாவோடு தனது நட்புறவைத் தொடங்கியவள் நாளடைவில் சங்கீதாவின் நட்புக்கும் ஆளானதில் ஆச்சரியம் ஏது? குழந்தையோடு குழந்தையாகி விளையாடும் அவனது குணம். அந்த இளந்தளிரின் குணாதிசயத்தையும் நுணுக்கமாகக் கண்டு கொள்ளும் அந்தத் திறன். நான்கு மாதப் பழக்கத்தில் தன்னை முழுவதுமாகப் புரிந்து கொண்ட அந்தப் பாங்கு... சங்கீதா மெல்ல மெல்ல அவன் வசமாகிக் கொண்டிருந்தாள்.

அன்று அரசாங்க விடுமுறை. இளங்கோ வழக்கம் போல வெளியே சென்றிருந்தான். துணிகளைத் துவைத்து மாடியில் காயப் போட்டு விட்டு படுத்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தவள் மழை பலமாகப் பெய்யும் சத்தத்தில் திடுக்கிட்டு விழித்தாள். அருகில் குழந்தையும் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருக்க

www.padippakam.com

தடதடவென்று ஓடிப் போய்க் கதவைத் திறந்து மாடிக்கு ஓட எத்தனித்தவள் வெளியில் ஒரு நாற்காலியின் மீது கிடக்கும் அந்தத் துணிக் குவியலைப் பார்த்தாள். அருகில் செய்தித்தாளின் மீது “கிளிப்”களின் அணிவகுப்பு.
அருகில் கண்ணன் அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டு இருந்தாள்.
சங்கீதா கனிவோடு அவனைப் பார்த்தாள்.
“உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம். கதவை ஒரு தட்டுத் தட்டி இருந்தா நான் எழுந்திருச்சிருப்பேனே”.
“இதுலே என்ன சிரமம் இருக்கு. எப்பவோ ஒரு நாள் மத்தியானம் நிம்மதியாத் தூங்கறீங்க. அதை ஏன் கெடுக்கணும்?

மற்றொரு நாள் மாலை சங்கீதா தான் கேட்டாள்.
“அதென்ன கார்முகில்னு ஒரு பேரு. கவிஞரா இருந்தா அது மாதிரித்தான் பேர் வெச்சுக்கணுமா..”
“அது நான் வெச்சது இல்லை. என்னோட மாமா என்னைச் சின்னவயசிலே இருந்தே அப்படித்தான் கூப்பிடுவாரு. கண்ணான்னு என்னைக் கூப்பிட்டதே இல்லை. சரிதான் நாம கார்முகில் மாதிரி கருப்பா இருக்கிறதாலே அப்படிக் கூப்பிடறாரு போல இருக்குன்னு நான் நெனச்சுக்கிட்டேன். அப்புறம் கவிதையெல்லாம் எழுத ஆரம்பிச்சதுக்கப்புறம் அதையே புனைப் பெயரா வெச்சுக்கிட்டேன்”.
“நீங்க கருப்புன்னு யார் சொன்னது?”
“அட நீங்க வேறே. சும்மா ஒரு ஜோக்குக்குச் சொன்னேன். மாமா ஒரு தமிழ் ஆர்வலர். அதனாலே இப்படிக் கூப்பிட்டு இருந்திருப்பாரு.”
“அதில்லே நான் சொல்லட்டுமா.. எதனாலே அவர் அப்படிக் கூப்பிட்டார்னு.”
“சொல்லுங்களேன். பார்க்கலாம்”
“உங்களோட ஈரமான மனசை அவரு அப்பவே புரிஞ்சுக்கிட்டாரு. அதனாலே தான் உங்களுக்கு இந்தப் பேரையே வெச்சாரு.
இந்தப் பதிலில் அசந்து போனவனாய் அவளது கண்களை ஒரு கணம் கூர்ந்து நோக்கியவன் அந்தக் கூர்மையைத் தாங்காது பார்வையை மாற்றினான். இப்படித்தான் இருமனங்களின் சங்கமிப்புக்கு அன்று வித்திடப்பட்டது.
சங்கமம் இறுக தொடர்ச்சியாகப் பல சம்பவங்கள்.

அன்று வேலை முடிந்து களைத்து ஓய்ந்து போன முகத்தோடு வீடு திரும்பியவளை கண்ணன் தான் எதிர் கொண்டான். அமுதா குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்தாள்.
“என்ன.. இன்னக்கி நீங்க வேலைக்குப் போகலியா..”
“லீவு போட்டிருக்கேன். நாளைக்கு ஒரு கவியரங்கத்துலே கலந்துக்கப் போறேன். அதுக்குக் கவிதை தயார் செய்யணுமே. காலையிலிருந்து அதுதான் வேலை. இப்பத்தான் எழுதி முடிச்சேன்.”
“அப்படியா. இதோ அரை மணி நேரத்துலே என்னோட வேலையை முடிச்சிட்டு வந்துடறேன். உங்க கவிதையைப் படிச்சுக் காட்டுங்க.” என்று சொல்லி உள்ளே சென்றவள் சிறிது நேரத்தில் வெளியில் வந்தாள். ஒரு நாற்காலியைப் போட்டுக் கொண்டு அவனருகில் அமர்ந்தாள்.


படிப்பகம்

"கவிதைத் தலைப்பு என்ன "
"கவிதைத் தலைப்பு இல்லை. கவியரங்கத் தலைப்பு - சமூக வளர்ச்சிக்கு திரைப்படங்களின் பங்களிப்பு" -
"சமூக வளர்ச்சிக்குத்தானா.. மாற்றத்துக்கு இல்லையா?
கண்ணன் சிரித்துக்கொண்டே சொன்னான்.
"வளர்ச்சி அடைந்த சமூகம் தான் மாறுதலுக்கு தயார் ஆகும்னு அவங்க நெனச்சிருக்கலாம்"
இந்த பதில் அவளுக்கு பிடித்திருந்தது.
"சரி அதிருக்கட்டும், கவிதையைப் படிக்கிறேன், கேளுங்க." ஏற்ற இறக்கங்களோடு கவிதையைப் படித்து முடித்தான்.
"எப்படி இருக்கு, அய்யாவோட கவிதை."
"அற்புதம் நாளைக்குக் கவியரங்கத்திலே இதுதான் முத்திரை பதிக்கப் போகுது"
மனம் துள்ளியது அவன் முகத்தில் தெரிந்தது.
"உங்களுக்குக் கவிதையெல்லாம் பிடிக்குமா"
"கவிதை பிடிக்கும், பாட்டுன்னா ரொம்பப் பிடிக்கும். நான் இசை ரசிகை"
"என்ன சினிமாப் பாட்டா?"
"அதுவும் தான்"
"எது மாதிரி சினிமாப் பாட்டு"
"பழைய பாட்டுகள் பிடிக்கும் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்களை விரும்பிக் கேட்பேன், அந்தக் காலத்து காதல் பாடல்கள் பிடிக்கும்."
"எங்கே ஒன்னு சொல்லுங்களேன் கேட்போம்"
"நீங்க அடிக்கடி வீட்டுக்குள்ளே ஒரு பாட்டைப் பாடீட்டு இருக்கீங்களே, அது ரெம்ப ரெம்ப பிடிக்கும்"
எதிர்பாராத இந்த பதில் கண்ணனை இன்பத்தின் எல்லைக்கே இழுத்துச் சென்றது. இருந்தும் தெரியாதவன் போல் கேட்டான்.
"என்ன பாட்டு"
"ஒராயிரம் பார்வையிலே.. உன் பார்வையை நானறிவேன்"
"அது எனக்கு பிடித்தது, உங்களுக்குப் பிடிச்ச பாட்டு ஒன்னு சொல்லுங்க" குரலில் உற்சாகம் கொப்புளித்தது.
"கலையே என் வாழ்க்கையின் திசை மாற்றினாய்.
நீயில்லையேல் நான் இல்லையே"
கண்ணனின் உடம்பெங்கும் புது இரத்தம் ஊற்றெடுத்தது. சங்கீதா சட்டென மறைந்து அவனது இதயமாகி நிறைந்தாள்.
மறுநாள் மாலை கண்ணன் கேட்டான்.
"சங்கீதா.. நாம இப்படி ஒரு எண்ணத்தை வளர்த்திட்டுப் போறது தப்பில்லையா?"
"நாம எங்கையோ போய்த் தேடிக் கண்டுபிடிச்சி இப்படி ஒரு எண்ணத்தை வளர்க்கலியே. அதுவா வந்துச்சு.. வளருது."
"அவரு - இளங்கோ என்னைப் பத்தி என்ன நெனைப்பாரு. கடைஞ்செடுத்த அயோக்கியன்னு நெனக்க மாட்டாரா அவரோட மகிழ்ச்சியான குடும்ப வாழ்வுலே

புகுந்த அரக்கன்னு என்னைக் கேவலமாத் திட்டுவாரே."
"அயோக்கியன்னு நெனப்பாரு, அரக்கன்னு திட்ட மாட்டாரு" சங்கீதா சிரிப்புடன் சொன்னாள்.
"என்ன சங்கீதா நான் சீரியசாப் பேசறேன். நீங்க ஜோக்கடிக்கறீங்களே."
"இல்லைங்க கண்ணன், நான் உன்மையைத்தான் சொல்றேன். மகிழ்ச்சியான குடும்ப வாழ்வைக் குலைச்சாத்தானே அரக்கன்னு சொல்லுவார். அவரோட குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியானது இல்லே. அவருக்கு எதுவுமே மகிழ்ச்சியைத் தராது. அப்பப்ப குடிச்சிட்டு தன்னை மறந்து கெடப்பாரே, அது ஒன்னு தான் அவருக்கு மகிழ்ச்சி"
"என்ன சங்கீதா இப்படிச் சொல்றீங்க, நீங்க ஒருத்தர ஒருத்தர் விரும்பிக் கல்யாணம் பண்ணிக்கலியா."
"விரும்பாம எப்படிக் கல்யாணம் பண்ணிக்க முடியும். ஆனா காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கலே. திருமணம் நிச்சயமானதுக்கப்புறம் ஒரு நாள் என்னைக் கேட்டாரு. என்னை பிடிச்சிருக்கான்னு. இருபத்திரண்டு வயசுப் பொண்ணுக்கு இருபத்தாறு வயசு ஆணைப் பிடிக்காமப் போயிடுமா. பிடிச்சிருக்குன்னு சொன்னேன். என்னைப் பிடிச்சிருக்கான்னு கேட்டேன். உன்னோட நடை பிடிச்சிருக்கு. நீ புடவை கட்டற அழகு பிடிச்சிருக்குன்னாரு. நடையும் புடவை கட்டற அழகும் பிடிச்சுப் போறதுக்குப் பேரு காமம். காதல்ங்கறதுக்கு அர்த்தம் வேறேன்னு நான் புரிஞ்சுக்குறதுக்குள்ளே அமுதா பொறந்தட்டா. என் மனசோட வாழற ஆணா இளங்கோ இல்லே. காதலே இல்லாமே ஒரு வாழ்க்கை நடந்தகிட்டு இருந்தது."

மனம் உருகிய நிலையில் தவிப்போடு முதல் முறையாக சங்கீதாவின் கைகளைப் பற்றினான் கண்ணன். அந்தக் தவிப்பில் பரிவு வழிந்து கொண்டிருப்பதை முழுமையாக உணர்ந்தாள் சங்கீதா.
"சங்கீதா இப்ப என்ன பண்றது. எனக்கு ஒரே குழப்பமா இருக்கு."
"நீங்க ஒண்ணும் குழப்பிக்காதிங்க. இந்த விசயத்தை ஆரம்பிச்சவ நான். அதனாலே நானே தான் இதை முடிக்கணும். இந்த பிரச்சனையை நம்ம மூணு பேரோடது தான்னு நான் நெனைக்கலே. எங்க ரெண்ட பேரோட பிரச்சனையாத்தான் பாக்கறேன். இதை சுமுகமாகத் தீர்த்துட முடியும்னு நான் நம்பறேன். நீங்க என்னை நம்பறீங்களா?
"சமீப காலமாக நான் என்னை விட உங்களைத் தான் அதிகமா நம்ப ஆரம்பிச்சிருக்கேன்."
நிலை கொள்ளா மகிழ்ச்சியில் சங்கீதா தத்தளித்தாள்.

அன்றிரவு தான் இளங்கோவிடம் தனது காதலைப் பற்றி சொன்னாள் சங்கீதா. அப்போதிருந்து இளங்கோவின் குடும்ப வாழ்வில் புயல் வீச ஆரம்பித்தது. இரவு நேரம் சண்டைக்கான காலம் ஆனது. படுக்கையறை போர்க்களம் ஆயிற்று. இளங்கோ கத்தினான். "வரிஞ்சு கட்டிகிட்டு நீ பண்றதே நியாயம்னு காட்டுக் கூச்சல் போடறியே.. நான் என்ன பண்ணணும்னு சொல்றே."
"எத்தனையோ தடவை சொல்லியாச்சு. இனிமேல்தானா சொன்னதைச் செய்யப் போறீங்க."

www.padippakam.com

"சொல்லு.. கடைசியா உன் திருவாய் மலர்ந்து சொல்லித் தொலை."
சங்கீதா கோபத்தில் உலரும் உதட்டை ஈரப்படுத்தினாள் பிறகு அழுத்தமாகச் சொன்னாள்.
"நம்ம ரெண்டு பேரும் பிரிஞ்சுக்கலாம்"
"நான் ஒத்துக்கலேன்னா."
"சொல்லாம கொள்ளாம நான் ஒதுங்கிக்குவேன்"
"அப்ப கோர்ட்டுலே கேஸ் போடு. எனக்கு புருஷனைப் பிடிக்கலே. இன்னொருத்தனைத் தான் பிடிச்சிருக்கு. அவனைக் கல்யாணம் பண்ணிக்க எனக்கு டைவர்ஸ் வேணும்னு. முதல்லே எங்கிட்டே இருந்து டைவர்ஸ் வாங்கு."
"காரியம் பண்ணாமே இருக்க - காலத்தைக் கடத்த அது ஒரு வழின்னு பாக்கறீங்களா. என்னைப் பொறுத்த வரைக்கும் இந்த அஞ்சு வருஷ அனுபவத்திலே கல்யாணம்ங்கற விஷயம் அதனோட நம்பகத் தன்மையை இழந்திடுச்சு. இதனாலே இப்ப எனக்கு டைவர்ஸ் தேவையில்லே. தேவைப்படும் போது யோசிக்கலாம். கோர்ட்டை விட என் மனசாட்சியை நான் மதிக்கறேன். என்னை டைவர்ஸ் செய்ய நீங்க வேணும்னா கோர்ட்டுக்குப் போகலாம்"
"நான் என்ன மயிருக்குப் போகணும் கோர்ட்டுக்கு. எவளோ ஒருத்தி பின்னாலே நானா நாய் மாதிரி அலையறேன்."
சங்கீதா நிதானமாகச் சொன்னாள்.
"நாலு வருஷத்துக்கு முன்னாலே அந்தப் பொண்ணு ஆனந்தியோட படுக்கறதுக்கு முன்னாடி எங்கிட்டே இருந்து டைவர்ஸ் வாங்கணும்னு தோணலியா?"
இளங்கோவின் முகம் சட்டென்று இருளடைந்தது.
"அது பழைய கதை. செய்த தப்புக்கு நான் மன்னிப்பும் கேட்டுக்கிட்டேன்."
"அதை நான் ஒத்துகிட்டு உங்களோட குடித்தனம் பண்ணலியா. அதே மாதிரி இதையும் நீங்க ஏத்துக்கணும். நானும் கண்ணனும் பழகறதைப் பொருட்படுத்தக் கூடாது. அப்ப வேணா நாம சேர்ந்து இருக்கலாம்."
"என்ன திமிர் இருந்தா நீ இப்படிப் பேசுவே."
"இதை நான் திமிராப் பார்க்கலே. நியாயமாப் பார்க்கறேன். உங்களுக்குப் பிடிக்கலேன்னா என்னை விட்டுட வேண்டியது தானே? பிரிஞ்சாலும் நாம நண்பர்களாக இருப்போம். உங்களுக்குன்னு ஒரு வாழ்க்கையை அமைச்சுக்க நான் எப்பவும் தடையா இருக்க மாட்டேன். ஆனா நான் இப்படித்தான் இருப்பேன்."
"ஆம்பளை அப்படி நடந்தா பொம்பளையும் அப்படி இருக்க முடியுமா? இது ஆம்பளையோட உலகம் தெரிஞ்சுக்க."
"இன்னும் கொஞ்ச காலத்திலே பொம்பளைக்கும் உரிமை ஆயிடும். அதைப் புரிஞ்சுக்க முயற்சி பண்ணுங்க."
"அப்ப வேணும்னா பார்த்துக்கலாம். இப்ப அடக்க ஒடுக்கமா ஒரு பொண்ணா இரு."
"அதுக்கு இது ஆம்பளையோட உலகம்னு ஆமோதிக்கற ஒரு பொண்ணைத் தான் பார்க்கணும்."
இளங்கோ சீறினான். "ஏய் சனியனே. உனக்கு அறிவே கொஞ்சம் கூடக்



படிப்பகம்

www.padippakam.com

கெடையாதா. என்னை ஏன் இப்படி வாட்டறே. ஏதோ தப்புப் பண்ணிட்டேன். திருந்திட்டேன். அதையே எப்பப் பாரு சொல்லிகிட்டு இருக்கியே. உனக்குக் கொஞ்சம் கூட ஈவு இரக்கமே கிடையாதா."

"ஈவு இரக்கம் இருக்கிறதுனாலே தான் முழுக்கதையையும் சொல்லி இன்னும் கடுமையா வாட்டமே இருக்கேன்."

இளங்கோவின் முகம் மாறியது. சுதாரித்துக் கொண்டு கேட்டான்.

"என்ன முழுக்கதை"

"எனக்குத் தெரியாதுன்னு நெனைக்க வேண்டாம். அதை நான் சொல்லத்தான் வேணுமா."

"ஆமா சொல்லு."

"சரி சொல்றேன். அமுதா பிறந்த போது எனக்கு ஏற்பட்ட கஷ்டம்.. சிசேரியன்... தொடர்ந்து நாலு மாசம் ஓய்வு வேணும்னு டாக்டர் சொல்லிட்டாரு. பிரசவத்துக்கு ஊருக்குப் போன நான் மூணு மாசத்துக்கப்புறம் திரும்பி வந்தேன். அந்தப் பொண்ணு ஆனந்தி இங்கே வந்துட்டுப் போயிட்டு இருந்தான்னு தெரிஞ்சுகிட்டேன். எந்தக் குறிக்கோளும் இல்லாத ஒரு ஆணுக்குப் பெண்ணுங்கறவ சக மனுஷி கிடையாது. வெறும் நுகர்வுப் பொருள் தான். அதில்லாமே அவனாலே இருக்க முடியாதுன்னு என்னை நானே சமாதானம் செய்துகிட்டேன். அக்கம்பக்கத்திலே இருக்கறவங்க என் காதுலே இந்த சேதியைப் போட்ட போது கூட எனக்குத் தெரியும்ங்கற பாவனையிலே நான் சிரிச்சு ஒதுங்கினேன். அந்த இடத்திலே உங்களை உத்தமன் ஆக்கினேன். அது மட்டும் இல்லே. அந்தச் சின்னப் பொண்ணு கர்ப்பம் ஆன விஷயம் தெரிஞ்சு அவளோட அம்மா எங்கால்லே வந்து விழுந்தாங்க. நான் என்ன சொன்னேன் தெரியுமா?"

இளங்கோ வாயடைத்துப் போயிருந்தான்.

"நான் சொன்னேன். உங்களுக்குத் தெரியாம இவ்வளவு தூரம் நடந்துடுச்சுன்னு என்னாலே நம்ப முடியலேம்மா. வேணும்னா ஒண்ணு பண்ணுங்க. உங்க பொண்ணை இந்த ஆளுக்கே கட்டி வெச்சிடுங்க. எனக்கும் இந்த ஆள் மேலே இருந்த பிரியம் போயிடுச்சு. நான் வேலைக்குப் போறவதானே. நான் தனியா இருந்தும் பொழைச்சுக்குவேன்'னு சொன்னேன்."

அவன் தலைகவிழ்ந்து கிடந்தான். சங்கீதா தொடர்ந்தாள்.

"அந்தம்மா சொன்னாங்க. 'அய்யோ.. மகராசி உன்னோட தங்க குணத்துக்கு இப்படி ஒரு மனுசனா வந்து வாய்க்கணும். இந்த ஆளை எம் மக கல்யாணம் பண்ணிகிட்டா என்னோட சாதி சனம் எங்களை சாதியை விட்டே தொலைச்சுக் கட்டிடுவாங்க. நான் கிராமத்தை விட்டு இந்த ஊருக்கு வந்தது ஏதோ பொழப்புத்தனம் பண்ணனும் தான். உன்னோட பொழப்பைக் கெடுக்க அல்ல தாயி. வந்த எடத்துல அவளை வேலைக்கு அனுப்பி வெச்சேன். நாலு காசு சம்பாதிக்கட்டும்னு. பதினாறு வயசுப் பொண்ணு. படிப்பு அதிகம் இல்லே. ஒடம்பு அரிப்புக்குன்னு ஆளைத் தேடீட்டா. எங்களை மன்னிச்சிடும்மா. நான் நாளைக்கே இந்த ஊரைக் காலி பண்ணீட்டு போகப் போறேன். அதைச் சொல்லத்தாம்மா வந்தேன். எனக்காக எம் மகளையும் மன்னிச்சிடு' ன்னு கதறினாங்க. அப்பத்தான் தெரிஞ்சது. அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறதாச் சொல்லி அவளை


படிப்பகம்

www.padippakam.com

வலைக்குள்ளே விழ வெச்சீங்கன்னு. போதுமா இன்னும் சொல்லவா."
அவனது பேயறைந்த முகம் அவளது பேச்சை நிறுத்தச் செய்திருக்க வேண்டும்.
எப்படியோ மூன்று நாட்கள் ஓடி விட்டன. இளங்கோவின் சிந்திக்கும் சக்திக்கேற்ப அவனும் ஏதேனும் யோசித்திருக்க வேண்டும். அது தான் நேரே கண்ணனிடம் சென்று நின்றான்.
இளங்கோவின் வருகை கண்ணனைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. என்ன செய்தி என்பதைப் போல பார்வையை உயர்த்திய கண்ணனின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்ட இளங்கோ குழந்தையைப் போல உடல் குலுங்கி அழுதான்.
"கண்ணன்... நீங்க நடந்துக்கறது உங்களுக்கே நல்லா இருக்கா. என்னோட நிம்மதியைக் கெடுக்கறதுக்குன்னே நீங்க இங்கே வந்தீங்களா. வேண்டாம் தயவு செய்து போயிடுங்க. உங்க ஊருக்கே திரும்பிப் போயிடுங்க. நான் இங்கே மானத்தோட வாழ்ந்துக்கிட்டிருக்கேன். என்னோட மரியாதையைக் கெடுத்து டாதீங்க."
கண்ணனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அமைதியாக இருந்தான். ஓரிரு நிமிடம் கழித்துச் சொன்னான்.
"இளங்கோ.. நான் இது பத்தி அவங்ககிட்டே பேசறேன்".
அன்று மாலை சங்கீதாவிடம் சொன்னான்.
"சங்கீதா விஷயம் ரொம்ப சீரியஸ் ஆயிடுச்சு. இளங்கோ என்னைத் தேடி வந்தார். நான் ஊரை விட்டுப் போகணும்ங்கறாரு."
"உங்ககிட்டே வருவார்னு எனக்குத் தெரியும். என்கிட்டே பேசி ஜெயிக்க முடியாதுன்னு தெரிஞ்சதுக்கப்புறம் அவருக்குள்ள ஒரே வழி நீங்க தானே. நான் முதல்லேயே சொன்ன மாதிரி இது எங்க ரெண்டு பேரோட பிரச்சனை தான். அதனாலே நீங்க ஒதுங்கி இருக்கறதுதான் சரி. நல்லதும் கூட. நீங்க வேணும்னா ஒரு பத்து நாள் வெளியூர் போயிட்டு வாங்க. அல்லது இப்படிப் பக்கத்துலே இருக்கிறதைப் தவிர்த்துட்டு ஏதாச்சும் நண்பர்கள் வீட்டிலே தங்குங்களேன். கண்ணன்.. எனக்காக நீங்க இதைச் செய்வீங்களா?"
"இதை மட்டும் இல்லே... உங்களுக்காக நான் எதை வேணும்னாலும் செய்வேன்."
என்றவன் சட்டென அவளது கைகளில் முத்தமிட்டான் மென்மையாக.
சங்கீதா உடல் சிலிர்க்க தன்னை மறந்து நின்று கொண்டிருந்தாள்.
நான்கைந்து நாட்கள் சென்றிருக்கும். அன்றிரவு சண்டை சூடு பிடித்துக் கொண்டிருந்தது.
"எங்கிட்டே பேசி ஜெயிக்க முடியாதுன்னு கண்ணன் கிட்டே போய் சரண்டர் ஆயிட்டீங்களாக்கும்."
"ஆமா.. வேறே வழி..."
"இப்படிச் செய்ய உங்களுக்கு வெட்கமா இல்லே."
"பொம்பளை உனக்கே வெட்கமில்லே. நான் எதுக்கு வெட்கப் படணும்"
"ஆம்பளை பொம்பளை பேச்செல்லாம் வேண்டாம். அவரை அனுப்பி வெச்சுகிட்டா வாழ்க்கை சுகப்பட்டுடுமா"
"சுகப்படுதோ இல்லையோ என்னோட குடும்ப கவுரம் பாழாப் போகாமே இருக்கும்.


படிப்பகம்

www.padippakam.com

வெளியே தலைகாட்ட முடியாமே நான் திண்டாட வேண்டியது இல்லையே."
"அந்த ஆனந்திப் பொண்ணோட நீங்க சுற்றித் திரிஞ்சப்போ என்னோட குடும்ப கவுரவம் பாழாப் போகலியா.. நான் அதை மௌனமா ஏத்துக்கலியா..."
"நீ பொம்பளை..."
"இப்படிச் சொல்றது அறியாமையோட உச்சகட்டம். நான் நெனைச்சிருந்தா அன்னைக்கே உங்களை சந்தி சிரிக்க வெச்சிருப்பேன். வேண்டாத புருஷனைக் கையும் களவுமாப் பிடிச்சு உங்க சமூக கவுரவத்தைக் காத்துலே பறக்க விட்டிருப்பேன். ஆனா... ஒரு அறியாப் பொண்ணோட வாழ்க்கை உங்களை மாதிரி ஒரு ரெண்டுங் கெட்டான் கிட்டே மாட்டிக்கக் கூடாதுன்னு நெனைச்சேன். அதனாலே தான் அவளோட கர்ப்பத்தைக் கலைக்கச் சொல்லி அவ அம்மா கையிலே ஆயிரம் ரூபாயைக் கொடுத்து அனுப்பினேன். இன்னொண்ணையும் சொல்றேன். நான் நினைச்சிருந்தா கண்ணன் பத்தின விஷயத்தைக் கூட உங்ககிட்டே இருந்து மறைச்சு இருக்கலாம். ஆனா உங்களை மாதரி நம்பிக்கைத் துரோகம் செய்ய நான் விரும்பலே. அதோடு இது உடம்பு மேலே வந்த ஈர்ப்பு இல்லே. மனசு ரெண்டும் கலந்ததாலே வந்தது. எத்தனையோ பொண்ணுக இது மாதிரி சூழலுக்கு ஆட்பட்டு என்ன செய்யறதுன்னு புரியமே இலை மறைவு வாழ்க்கை வாழ்ந்துகிட்டு நாய் படாத பாடு படறாங்க. அங்களிலிருந்து என் வாழ்க்கை மாறுபட்டு இருக்கணும்னு நெனைச்சேன்"

"அதனாலே அவனோட ஓடிப் போயிடுவேன்னு சொல்றியா"

சங்கீதா நிதானத்தைக் கை விட்டாள். ஓங்கிய குரலில் உறுதியாகச் சொன்னாள். "அவரோட ஓடிப் போயிடுவேன்னு சொல்லலே. உன்னை விட்டுப் பிரிஞ்சு போயிடுவேன்னு சொல்றேன். இனி உன்னோட வாழ என்னாலே முடியாதுன்னு சொல்றேன்."

இளங்கோவின் மூர்க்கம் தலைக்கேறியது. உரத்துக் கத்தினான். "அது வரைக்கும் நீ உயிரோட இருந்தால்தானே. உன்னைக் குழியிலே போட்டு மூடீட்டு இல்லே வேறே வேலை பார்ப்பேன்".

உறக்கம் கலைந்து எழுந்த அமுதா சிணுங்க ஆரம்பித்தாள். அறையில் நிசப்தம் நிலவ ஆரம்பித்தது. அன்றைய சண்டை இப்படித்தான் முடிவுக்கு வந்தது

சங்கீதாவீன் கடிதத்தைப் படித்துவிட்டு சவமாய்க் கட்டிலில் கிடந்த இளங்கோ இரவு உறங்கி இருக்க முடியாதுதான். காலைப் பொழுது மெல்லப் புலர்ந்து கொண்டிருந்தது. கதிரவன் சிவந்த நிறத்தோடு அடிவானிலிருந்து வெளிக் கிளம்ப உயர்ந்து வளர்ந்திருந்த அந்த மாமரத்தின் உச்சியிலிருந்து குயில் ஒன்று கூவிக் கொண்டிருந்தது.

கட்டிலில் இருந்து எழுந்த இளங்கோவின் முகத்திலும் ஒளி வெள்ளம் பாய்ந்திருந்தது. இருள் நீங்கிய தெளிவின் வெளிப்பாடுதானே ஒளி முகம். அப்படியானால்..

சங்கீதாவின் காதலை அங்கீகரிக்க இவனும் ஆயத்தமாகி விட்டானா என்ன?

**- லலிதா, சென்னை**

www.padippakam.com


# இம்ரான்

ஜெராக்ஸ் | FAX

எலக்ட்ரானிக் டைப்பிங் | STD/ISD

ஸ்பைரல் | கொரியர்ஸ்

## டெலிபோன் லிங்க் சர்வீஸ்

70951 - 54964
புதிய பேருந்து நிலையம் அருகில்,
மதுரைச் சாலை,
அருப்புக்கோட்டை - 626 101.

71054 - 54967
நாடார் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்
திருச்சுழி - பந்தல்குடி சாலை,
அருப்புக்கோட்டை - 626 101.

## இம்ரான் டிராவல்ஸ்

விவேகம் கோச் ஓமினி பஸ்கள்

அருப்புக்கோட்டை to சென்னை
இரவு 8.30, 9.00, 10.15
அருப்புக்கோட்டை to கோவை
இரவு 11 மணி
24 மணி நேர புக்கிங்


படிப்பகம்

www.padippakam.com




விரைவில்....

# சிறுவர் இதழுக்கான அனைத்துக் குணங்களுடன் ஒரு - சிறுவர் இதழ்.

படைப்புகள்,

துணுக்குகள்

இதழுக்காக முன்மொழியும் பெயர்,

கருத்துக்கள்,

அட்டைப் படத்திற்கான ஆலோசனை,

பிறவிபரங்களுடன்

தொடர்பு கொள்ள :

கருத்தாளர் வட்டம்
5-36-4ஆ, பாரதி நகர்
மின்வாரிய குடியிருப்புகள் கிழக்கு,
அருப்புக்கோட்டை - 626 101.
தொலைபேசி : 04566-73322.


கதவு

PRINTED BOOK ONLY

5,36-4ஆ, பாரதி நகர்
மின்வாரிய குடியிருப்புகள்(கிழக்கு)
அருப்புக்கோட்டை - 626 101
✆ 04566 - 73322

படிப்பகம்